மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.02/2023
இ.ம.எண்.01/2021
அ.வ.எண்.14/2021

M.K.பெருமாள் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

மாரியப்பன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 01.06.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.K.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனுவின் கீழ் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனு எண்.01/2021ல் மனுதாரர் தரப்பின் ஆவணமாக குறியீடு செய்ய மனு எண்.01/2021ன் மனுதாரர் தரப்பு விசாரணையை மறுதிறப்பு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.01/2021 என்ற மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 03.01.2023ம் தேதியில் சொத்துவரி ரசீது எ.ம.சா.ஆ.1 ஆகவும், மின் கட்டண ரசீது எ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி இ.ம.எண்.01/2021 ஆனது மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், தற்போது

மேற்படி இரண்டு ஆவணங்களும் தாவா சொத்திற்கு தொடர்பற்றவை என மனுதாரருக்கு தெரியவந்தது.

(ii) எனவே மேற்படி ஆவணங்கள் எந்த சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்பது குறித்து மேட்டூர் நகராட்சியிலிருந்தும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வட்டத்திலிருந்தும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி உரிய விளக்கம் மனுதாரரால் பெறப்பட்டுள்ளது. மேற்படி விளக்கத்தின்படி இ.ம.எண்.01/2021 ல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களானது தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல என தெளிவாக தெரியவருகிறது. ஆகவே மேற்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி மனுதாரருக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்களை இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமானதாகும். எனவே இ.ம.எண்.01/2021 ல் 03.11.2022 ம் தேதியில் முடிக்கப்பட்ட மனுதாரர் தரப்பு சாட்சியத்தை ஆவணங்களை தாக்கல் செய்ய மறுதிறப்பு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) <u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

இம்மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சொத்துவரி ரசீதையும், எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மின்கட்டண ரசீதையும் குறித்து சம்பந்தப்பட்ட துறையினருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி தகவல் கோரியதாகவும், மேற்படி துறை அலுவலர்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி வழங்கிய தகவல்படிக்கு மேற்படி இரு ஆவணங்களும் தாவா சொத்துக்கு சம்பந்தப்பட்டதல்ல என்றும் கூறியுள்ள மனுதாரரின் சங்கதி பொய்யாகும். ஏனெனில் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி வழங்கப்படும் தகவல்கள் இந்திய சாட்சிய சட்டப்படிக்கு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்கிற அறுதியான சட்டப்படிக்கு மனுதாரரின் மனுவானது எவ்விதத்திலும் நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி இ.ம.எண்.01/2021 ல் மனுதாரர் தரப்பு விசாரணையை மீண்டும் திறக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெறப்பட்ட ஆவணங்களை இந்திய சாட்சிய சட்டப்படிக்கு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இவ்வழக்கு வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருக்கும்போது இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.01/2021 என்ற மனுவில் இருதரப்பிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மனு விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், மனுதாரர் தரப்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களை கூடுதலாக குறியீடு செய்ய வேண்டி தங்கள் தரப்பை மீண்டும் திறக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெறப்பட்ட ஆவணங்களை இந்திய சாட்சிய சட்டப்படிக்கு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட ஆவணங்களை வழக்கு விசாரணையில் குறியீடு செய்ய இயலுமா? என்பதை பரிசீலனை செய்கையில், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களை குறியீடு செய்வதற்கு மேற்படி சட்டத்தில் குறிப்பாக எவ்வித தடையும் இல்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(v) அதே சமயத்தில் இந்திய சாட்சிய சட்டம், 1872, பிரிவு 78 ன் சட்ட வாசகத்தில், பொது ஆவணத்தை அதன் அசலையோ அல்லது சான்றிட்ட நகலையோ தாக்கல் செய்வதன் மூலம் அதை நிரூபிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்படும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் 2ம் நிலை சாட்சியம் எனினும் அவற்றை இந்திய சாட்சிய சட்டம், 1872, பிரிவு 77ன்படி பொது ஆவணங்களின் உள்ளடக்கத்தை நிரூபிப்பதற்கு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாம் என்பதாலும், மேலும் இந்திய சாட்சிய சட்டம், 1872, பிரிவு 76ன்கீழ் மேற்படி சான்றிட்ட ஆவணங்களின் உண்மைத் தன்மைக்கு சட்ட அனுமானம் உள்ளதாலும், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களை நீதிமன்ற வழக்கு விசாரணையில் குறியீடு செய்வதில் எவ்வித தடையும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) மேற்கண்ட இந்நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை அனுசரிக்கும் வகையில் மாண்பமை பம்பாய் உயர்நீதிமன்றத்தால் "Dr.M.K.Prakash petitioner v. SMT. Snehmala Sapale & Anr.S, W.P.No.4651 of 2016" என்ற வழக்கில்,

> “Upon hearing the learned counsel and on perusal of records, the settlement report was a true copy issued to the petitioners under Right to Information Act. The said document was issued by the Public Information Officer of the State Government. The said document has been obtained by the petitioners by due process of law and as such the question of petitioners being precluded from producing the said document does not arise at all. **The relevancy or otherwise of the said document would have to be considered at the time of appreciating**

**the evidence on record. It is not open to the learned Judge to go into the relevancy at this stage when it is not disputed that the documents were marked for identification.** The said document was marked for identification during the examination of AW1 and as such, **considering that the petitioners have obtained the certified copy of the said document from the official record of the State Government, the learned Judge ought to have permitted the petitioners to produce the said document and taken the said document on record**."

என்ற சட்டநிலைப்பாட்டை வகுத்துரைத்துள்ளது தெரியவருகிறது.

(vii) மேற்கண்ட இந்திய சாட்சிய சட்டம், 1872, பிரிவுகள் 76 முதல் 79 வரையிலான சட்ட வாசகங்களையும், மேற்படி முன்தீர்ப்பையும் கவனமாக கருத்தில் கொள்கையில், தகவல் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணங்களை வழக்கு விசாரணையின் போது தரப்பினர்கள் குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லை என்பதும், மேற்படி ஆவணங்களின் தொடர்புடைமை குறித்து சாட்சியங்களை பரிசீலிக்கும் போது தான் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி ஆவணங்களை வழக்கு விசாரணையில் குறியீடு செய்ய (Admissibility) எவ்வித தடையும் இல்லை என்பதும் தெரியவருகிறது.

(viii) எனவே இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், நீதியின் நலனையும் கருத்தில் கொள்கையில், இம்மனுவின் கீழ் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இ.ம.எண்.01/2021ல் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்க உத்தரவிடக் கோரியுள்ள மனுதாரரின் இம்மனுவானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதாலும், மேலும் மனுதாரர் தன் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் மற்றொரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், வழக்கு திறக்கப்படுவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதகமான சூழலும் ஏற்படாது என்பதை கருத்தில் கொள்கையிலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.06.09 16:50:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.06.09 16:50:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.